‘கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கத்துக்கு விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, நவ.4

மத நல்லிணக்கத்துக்காக பாடுபட்டு உயிர் நீத்த கோவையை சேர்ந்த கோட்டை அமீர் பெயரால் ‘கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கம்’ ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு சிறப்பாக சேவை செய்துவரும் ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதலமைச்சரால், குடியரசு தினவிழாவின் போது வழங்கப்படுகிறது.

ரூ.25 ஆயிரத்துக்கான காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும். மத நல்லிணக்கத்திற்காக சேவை செய்துவரும் தமிழகத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இந்த பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். இந்த பதக்கம் பெற வயது வரம்பு ஏதுமில்லை.

விண்ணப்பங்கள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர் மூலமாகவோ அல்லது https://awards.tn.gov.inஎன்ற இணையதளம் மூலமாகவோ பொதுத்துறை அரசு முதன்மைச்செயலாளருக்கு அடுத்த மாதம் 14ந் தேதிக்கு முன்பாக அனுப்பலாம் என தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி: திருவள்ளூர் கலெக்டர் அறிவிப்பு

திருவள்ளூர், நவ. 4–

திருவள்ளூர் மாவட்ட தாட்கோ திட்டத்தின் சார்பாக 7 பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என்று கலெக்டர் பா.பொன்னையா கூறியுள்ளார்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு குறுகிய கால (3 மாதம் முதல் 6 மாதம் வரையிலான) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள கட்டணமில்லாமல் அளிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் 7 பயிற்சி நிறுவனங்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்திட பயிற்சி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சில நிறுவனங்களுக்கும் பயிற்சி ஆணைகள் வழங்கப்படவுள்ளது.

தங்களது தகுதிக்கேற்ப ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல மாணவ மாணவியர்கள் பயிற்சி நிறுவனங்களை தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் பயிற்சியினை மேற்கொள்ளவும். தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக வழங்கப்படும் இத்திறன் மேம்பாட்டு பயிற்சி முற்றிலும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. மேலும் மாணவ மாணவியர்கள் பயிற்சி பெற சென்று வருவதற்கான பயணப்படி, போக்குவரத்து செலவு மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற பயிற்சியாளர்கள் மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பெற்ற பயிற்சிக்கு ஏதுவாக தொழில் தொடங்கிட, தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். தாட்கோ மானியத்துடன் கூடிய வங்கிகடன் வழங்கிட ஆவண செய்யப்படும். இதன் மூலம் ஆதிதிராவிட பழங்குடியினர் வாழ்வாதாரம் உயர்வதுடன், வாழ்வும் உயரும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில்

பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு, சாஸ்தாகோவில் அணைகளில் இருந்து நாளை தண்ணீர் திறப்பு

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவு

3934 ஏக்கர் நிலம் பாசன வசதி

சென்னை, நவ.4–

விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு, சாஸ்தாகோவில் அணைகளில் இருந்து நாளை (5–ந் தேதி) முதல் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டத்தில் உள்ள சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து 5.11.2020 முதல் 22.12.2020 வரை 48 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டத்தில் உள்ள 3,130.68 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து 5.11.2020 முதல் 28.2.2021 வரை பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டத்தில் உள்ள 802.93 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வத்தை வடசென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள, கழக அமைப்புச் செயலாளரும், மீன்வளம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சருமான டி.ஜெயக்குமார் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ஜனவரி 20–ந்தேதி இறுதி வாக்காளர் பட்டியல்

வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகள்: அனைத்து கட்சிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி ஆலோசனை

சென்னை, நவ.4

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவது மற்றும் வாக்காளர் பட்டியலை திருத்தும் பணிகள் பற்றி அனைத்து கட்சிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நேற்று ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் வருகிற 16ந் தேதி ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகள் தொடங்கும். வரும் டிசம்பர் 15ந் தேதி வரை இந்த பணிகள் நடைபெறும். பின்னர் ஜனவரி 20ந் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொள்வதற்கு தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அனைத்து கட்சி கூட்டம் தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அண்ணா தி.மு.க. சார்பில் அதன் நிர்வாகிகள் பொள்ளாச்சி ஜெயராமன், மனோஜ் பாண்டியன்; தி.மு.க. சார்பில் ஆர்.எஸ். பாரதி, என்.ஆர்.இளங்கோ; பா.ஜ.க. சார்பில் காளிதாஸ், கிருஷ்ணகுமார்; காங்கிரஸ் கட்சி சார்பில் தாமோதரன், நவாஸ்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஆறுமுக நயினார், ராஜசேகர்; இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஏழுமலை, பெரியசாமி;

தே.மு.தி.க. சார்பில் பார்த்தசாரதி, நல்லதம்பி; திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் கலைவாணன், வடிவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

10 லட்சம் விண்ணப்பம்

பின்னர் நிருபர்களுக்கு அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:

அண்ணா தி.மு.க. பொள்ளாச்சி ஜெயராமன்: இதுவரை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள், பெயர் சேர்ப்பு, முகவரி மாற்றம், புகைப்பட மாற்றம் போன்றவற்றுக்காக விண்ணப்பித்திருப்பதாகவும், ஆன்லைன் மூலம் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

கொரோனா காரணமாக முகவரி மாறிய வாக்காளர்களை சேர்ப்பதற்கு அதிக வாய்ப்பு கொடுத்து, குறுகிய காலத்தில் அவர்களை சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளோம். வெளிநாட்டில் வசிக்கும் தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஆன்லைன் மூலம் பெயர் பதிவுக்கு விண்ணப்பித்தால் அதையும் உடனே சேர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம்.

ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே பெயர் பதிவு செய்திருந்தால் அதை புதிய முறையில் கையாண்டு தானாகவே நீங்கிவிடும் வகையில் சரி செய்கிறார்கள்.

வாக்குசாவடி எண்ணிக்கை உயர்வு

வாக்காளர்கள் எளிதாக வந்து வாக்களிக்கும் வகையில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை உயர்த்த கோரியுள்ளோம். வாக்காளர் பட்டியல் திருத்த காலகட்டத்தில் 4 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. அனைத்தையும் வாக்காளர்களுக்கு ஏற்ற வகையில் எளிமைப்படுத்துவதாக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

தி.மு.க. ஆர்.எஸ்.பாரதி: வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் நியாயமும், நேர்மையும் இருக்க வேண்டும். இறந்த வாக்காளரின் பெயரை நீக்குவதற்கு இறப்பு சான்றிதழ் கேட்கிறார்கள். இதற்கு என்னென்ன ஆவணங்களை அளிக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும்படி கோரியுள்ளோம்.

கொரோனா காலக்கட்டத்தில் சென்னையில் இருந்து லட்சக்கணக்கானோர் குடிபெயர்ந்துள்ளனர். அவர்களின் வாக்குரிமை மறுக்கப்படக்கூடாது என்று கருத்து கூறினோம்.

இதுதொடர்பாக ஆன்லைன் மூலம் பலர் விண்ணப்பித்திருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார். படித்தவர்கள், வசதி படைத்தவர்களால்தான் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்றும், சென்னையில் இருந்து குடிபெயர்ந்து சென்ற ஏழை, எளிய, பாமர மக்களுக்கு வாக்குரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தோம். 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தபால் ஓட்டுகளை வழங்குவது, கொரோனா பரவல் காலக்கட்டத்துக்கான தற்காலிக ஏற்பாடுதான் என்று தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

வீட்டில் இருந்து ஓட்டு

தே.மு.தி.க. பார்த்தசாரதி: இந்த முறை ஒரே வாக்காளர் பட்டியலாக அளிக்க இருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார். அதில் இறந்த வாக்காளர்கள், முகவரி மாறிய வாக்காளர்களின் பெயர் பட்டியலும் வரும் என்றும் தெரிவித்துள்ளார். கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் இருந்தபடி வாக்களிக்க வழிவகை செய்யும்படி கேட்டுக்கொண்டோம். 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதுபோன்ற வாய்ப்பு தரப்படும் என்று தெரிவித்தார்.

புதிதாக வாக்காளர் பட்டியலில் சேருகிறவர்களுக்கு காலதாமதம் இல்லாமல் உடனடியாக அடையாள அட்டை வழங்க வேண்டும் என்று கூறினோம். தேர்தலுக்கு முன்பதாகவே அதை வழங்கிவிடுவதாக அவர் உறுதி அளித்தார்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தமிழகத்தில் 4 நாட்கள் சிறப்பு முகாம்

சென்னை, நவ.4

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இம்மாதம் 21, 22 மற்றும் டிசம்பர் 12, 13ந்தேதிகளில் சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சத்யபிரத சாகு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

வரும் ஜனவரி 1ந்தேதியை வாக்காளராகும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்க முறை திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்திற்காக இந்திய தேர்தல் ஆணையம், கால அட்டவணையை அறிவித்துள்ளது. அதன்படி, ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 16ந்தேதி வெளியிடப்பட வேண்டும். இதில் பெயர் சேர்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனை களுக்காக 16ந்தேதியில் இருந்து டிசம்பர் 15ந்தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அளிப்பதற்காக 21, 22ந்தேதிகள் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை), டிசம்பர் 12 மற்றும் 13 (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும். வரும் ஜனவரி 20ந்தேதியன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். தேசிய வாக்காளர் தினம் ஜனவரி 25ந்தேதி நடத்தப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிக்கலாம். அவர்கள் சிறப்பு முகாம்கள் நடக்கும் தேதிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை சரிபார்க்க உதவி செய்யலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED
CIN: L85110TN1979PLC008035
Regd. Office : No. 19 Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai – 600 028
Secretarial Dept : Ali Towers, II Floor, No. 55 Greams Road, Chennai – 600 006
Tel. No. 044-28290956, 28293896, Email : investor.relations@apollohospitals.com
Website : www.apollohospitals.com

NOTICE

Notice is hereby given, pursuant to Regulations 29 read with Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 with the Stock Exchanges, that a meeting of the Board of Directors of the Company is scheduled to be held on Wednesday, the 11th day of November 2020 to consider inter alia, approve and take on record unaudited standalone and consolidated financial results of the Company for the quarter and half year ended 30th September 2020 subjected to limited review by the Auditors.

This intimation is also available on the website of the Company at www.apollohospitals.com and on the website of the Stock Exchanges where the shares of the Company are listed, at www.bseindia.com and www.nseindia.com respectively.

By Order of the Board,
For Apollo Hospitals Enterprise Limited,

Place : Chennai
Date : 2nd November 2020

S.M. Krishnan
Vice President – Finance
& Company Secretary

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
ஓபராய் குரூப் உறுப்பினர்
CIN: L92490TN1983PLC009903
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: + 91-44-2234 4747; Fax: +-91-44-2234 6699,
Website: www.eihassociatedhotels.in

30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

		30.09.2020 முடிந்த 3 மாதங்கள் தணிக்கை செய்யாதது	30.09.2020 முடிந்த 6 மாதங்கள் தணிக்கை செய்யாதது	30.09.2019 முடிந்த 3 மாதங்கள் தணிக்கை செய்யாதது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1,420.58	1,860.56	4,747.67
2	வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(1,509.58)	(3,622.05)	(355.96)
3	வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(1,509.58)	(3,622.05)	(355.96)
4	வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(1,073.53)	(2,592.58)	506.15
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்/(நஷ்டம்)	(1,061.95)	(2,591.05)	427.41
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10)	3,046.81	3,046.81	3,046.81
7	இதர ஈக்விட்டி (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) 31 மார்ச் 2020 தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் உள்ளபடி			31,469.13
8	வரிக்கு பின் நிகர லாபத்தில் ஒரு சம பங்கு வருவாய் (முழுவதும் செலுத்தப்பட்ட சம பங்கு ரூ.10) (அ) அடிப்படை	(3.52)	(8.51)	1.66
	(பி) பலமிழந்தது	(3.52)	(8.51)	1.66

குறிப்புகள்:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015, விதி 33ன் கீழ், மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் விரிவான முறையில் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு விவர அறிக்கை கம்பெனியின் இணைய தளம் (www.eihassociatedhotels.in) மற்றும் தேசிய ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.nseindia.com) மற்றும் பிஎஸ்டி லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com)ல் உள்ளது.
2. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் 3 நவம்பர், 2020 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிதிநிலை முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் குறுகிய மறுபரிசீலனை செய்தனர்.

விக்ரம்ஜித் சிங் ஓபுராய்
நிர்வாக இயக்குனர்
DIN : 00052014

புதுடெல்லி
3 நவம்பர், 2020

சொத்து விற்பனைக்கான ஆன்லைன் இ–ஏலம்

போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்
PhoenixARC
பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098.
Tel: 022–6741 2314, Fax: 022–6741 2313
CIN: U67190MH2007PTC168303
Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

திரு. சுப்பிரமணியன் மெய்யப்பன் அவர்கள், போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டிற்கு (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 18–1 ஸ்கீம் E–ன் அறங்காவலராக செயல்படுதல்) (பிஆர்சி), கடன் கணக்கு எண்கள். 403SH017761317 & 403SH017762352–ன் கீழ் 2.11.2020 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.33,14,889/– (ரூபாய் முப்பத்துமூன்று லட்சத்து பதினான்காயிரத்து எண்ணூற்றுஎண்பத்துஒன்பது மட்டும்) மற்றும் 3.11.2020 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 11.02.2020 அன்று போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டால் (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 18–1 ஸ்கீம் E–ன் அறங்காவலராக செயல்படுதல்) (பிஆர்சி) சுவாதீனம் செய்யப்பட்டது. அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 26.11.2020 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறைந்தபட்ச விலை: ரூ.21,50,000/– (ரூபாய் இருபத்தோரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.2,15,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மற்றும் கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 25.11.2020 அன்று மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: அம்பத்தூர் கிராமம், மனை எண்கள். 497 மற்றும் 498, சர்வே எண்கள். 5720(PT), 572/6(PT) மற்றும் 572/8(PT), கட்டிடத்தின் பெயர் ''மனோகர்'', பொதுப்பகுதி உள்பட தரை தளம், ப்ளாட் எண். ஏ கட்டிடப் பகுதி 825 சதுர அடி மற்றும் மொத்த நிலம் 2400 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 472 சதுர அடி. அதன் எல்லைகள் :

வடக்கில்: மனை எண்.499 மற்றும் 500, தெற்கில்: மனை எண்.497 மற்றும் 498/சப் டிவிஷன் ஏ : கிழக்கில் : 6.00 மீட்டர் சாலை, மேற்கில் : மனை எண்.495 மற்றும் O.H.T.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. சூரியா பெரியசாமி** (+91 9800222111), **திரு. வேல்முருகன் கதிர்வேல்** (+91) **திரு. விஜய் குமார் மேனன்**(+91 9940572248), MS. **அனிஷா ஷிண்டே** (022–67410442), **திரு. ராஜேந்திரா தாஹியா** (+91 8448264515) மற்றும் **திரு. ஆகாஷ் சக்சேனா** (+91 8860001910)ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://phoenixarc.co.in/saleauction.php?id=NjYy and /or on https://phoenixarc.auctiontiger.net.ல் பார்வையிடலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக
(போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 18–1 ஸ்கீம் E–ன் அறங்காவலராக செயல்படுதல்)

இடம்: சென்னை
தேதி: 04.11.2020

சான்கோ டிரான்ஸ் லிமிடெட்
CIN: L60220TN1979PLC007970
பதிவு அலுவலகம்: எஸ்டி டவர், புதிய எண். 24 மற்றும் 25, இரண்டாவது லைன் பீச் ரோடு சென்னை–600 001.
Tel: +91-44-6644 9000 Fax: +91-44-6644 9009
E-mail: shareholder@sancotrans.com Website: www.sancotrans.com

அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே செப்டம்பர் 30, 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, 12 நவம்பர் 2020 அன்று மாலை 05.30 மணிக்கு நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குழுவின் ஆணைப்படி
சான்கோ டிரான்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– பிரசன்னா N
கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 03.11.2020

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
CIN: L65100TN2007PLC064069
பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, செப்டம்பர் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, நவம்பர் 13, 2020 வெள்ளிக்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்க்காக
தீப்தி ஈ.
நிறுவன செயலர்

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 03, 2020

SPIC
ஸதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
CIN: L[illegible]TN[illegible]969PLC006776
பதிவு அலுவலகம்: ஸ்பிக் ஹவுஸ், 88 மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. Tel: 22350245
Website: www.spic.in Email: spiccorp@spic.co.in

அறிவிப்பு

SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 47ன் படி 30 செப்டம்பர் 2020 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து அங்கீகரித்தல் உள்ளிட்ட அலுவல்களை மேற்கொள்ள நிறுவனத்தின் இயக்குநர் குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை 13 நவம்பர் 2020 அன்று நடைபெறவுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த தகவல் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்க செய்யப்படும்.

ஸதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெடுக்காக,
எம்.பி. கணேஷ்
செயலாளர்

நாள் : 3 நவம்பர் 2020
இடம் : சென்னை - 600 032

mercantile
மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்
CIN: [illegible]
பதிவு அலுவலகம்: 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032.
Website: www.mercantileventures.co.in
Email: admin@mercantileventures.co.in

அறிவிப்பு

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 47ன் படி, 30 செப்டம்பர் 2020 அன்று முடிந்த 2வது காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, அங்கீகரிக்க நிறுவனத்தின் இயக்குநர் குழுக்கூட்டம் [illegible] 12 நவம்பர் 2020 அன்று நடைபெறவுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த தகவல் மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்க செய்யப்படும்.

மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்டிற்காக
E N ரங்கஸ்வாமி
(DIN: 06463753)
முழுநேர இயக்குநர்

இடம்: சென்னை
தேதி: 04.11.2020